24.06.2025.

## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

## விழுப்புரம்

## அமர்வு வழக்கு எண்.205/2018

அ.சா.35

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தனவேல் | | |
| த/பெ | தர்மன் | | |
| கிராமம் | விருகம்பாக்கம் | தொழில் | காவல்துறை துணை கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| தாலுக்கா | சென்னை | வயது | 62/2025 |
| மாவட்டம் | சென்னை | தேதி | 24.06.2025. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆணையராக சென்னையில் பணிபுரிந்து, 2020 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2014 ஆம் ஆண்டு திருச்சி இருப்புப் பாதை காவல் பிரிவில் காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்த போது, கடந்த 07-05 - 2014 அன்று எனது சரகத்திற்கு உட்பட்ட, விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலையத்திற்கு நான் வந்தபோது, விழுப்புரம் ரயில்வே காவல் நிலைய ஆய்வாளர் திரு.வாசுதேவன் என்பவர் 07-05-2014 அன்று 15.00 மணிக்கு எழுத்து மூலமாக புகார் ஒன்றை என்னிடம் கொடுத்தார். அந்த புகாரை பெற்று, ரயில்வே

காவல் நிலையம் குற்ற எண் 26/2014 கு.வி.மு.ச பிரிவு 176 1 A படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். என்னிடம் காட்டப்படுவது வாசுதேவன் என்னிடம் கொடுத்த புகார்தான். அந்த புகார் அ.சா.ஆ. 28 ஆகும். அதன் பேரில் நான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 29 ஆகும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு நான் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடம் குறித்து நான் சாட்சிகள் வல்லரசு த/பெ மூர்த்தி, நெ.116, ஜி.ஆர்.பி தெரு விழுப்புரம், ராஜேஷ் த/பெ தர்மலிங்கம், நெ.210, ஜி.ஆர்.பி தெரு விழுப்புரம் ஆகியோர் முன்னிலையில், ஒரு வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தேன். அந்த பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.30 ஆகும். வரைபடம் அ.சா. ஆ. 31 ஆகும். பிறகு இது குறித்து சாட்சிகள் அசாரியா, சிவகுமார், ரமேஷ், ராபர்ட், ரவி, பாலமுருகன், லோகேஸ்வரன் PC 1215 விழுப்புரம் ரயில்வே காவல் நிலையம், திருக்குமரன் PC 1300, வல்லரசு, ரமேஷ், ஐயப்பன், பிரகாஷ், ரயில்வே காவல் நிலைய ஆய்வாளர் வாசுதேவன், ஆகியோர்களை அசாரியா என்பவரிடமிருந்து ஜெயவேல் (இந்தவழக்கில் இறந்த நபர்) பிக் பாக்கெட் அடித்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தேன். அவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். ஜெயவேல் என்பவர் காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டார் என்று வாசுதேவன் கொடுத்த புகார் மூலம் தெரிய வந்ததாலும், அவரது இறப்பு குறித்து, கண்டறிய இந்த வழக்கு காவல் நிலைய மரணம் என்பதாலும், அவரது இறப்பு குறித்து கண்டறிய மேல்விசாரணைக்காக விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு இறந்த நபரின் மரணம் குறித்து விசாரணை நடத்த கோரி ஒரு வேண்டுகோள் கடிதம் அளித்தேன். என்னிடம் காட்டப்படுவது தான் நான் தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அளித்த வேண்டுகோள் கடிதம் ஆகும். அது அ.சா.ஆ. 32 ஆகும். அதன் பிறகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் ஜெயவேல் என்பவரின் இறப்பு குறித்து விசாரணை நடத்த விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் - 1 அவர்களை நியமனம் செய்தார். பிறகு நீதித்துறை நடுவர் உடன் நானும், விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு

சென்றோம். அங்கு சென்று பிரேதத்தை காவலர்கள் அடையாளம் காண்பிக்க, நீதித்துறை நடுவர் எண் -1 அவர்கள் விசாரணை செய்தார்கள். விசாரணைக்கு உதவியாக நான் இருந்தேன். பிறகு ஜெயவேலின் பிரேதத்தின் மீது இருந்து எடுக்கப்பட்ட ஒரு வெள்ளை நீல நிற கட்டம் போட்ட ரத்தக்கறை படிந்த லுங்கி ஒன்று, கத்தரிப்பூ துண்டு ஒன்று (இருபுறமும் பச்சை பார்டர் போட்ட ரத்தக்கறை படிந்தது), இவற்றை படிவம் - 91ல் கைப்பற்றினேன். அந்த படிவம்- 91 அ.சா.ஆ.33 ஆகும். அந்த லுங்கி மற்றும் துண்டு ஆகியவற்றை பார்த்தால் என்னால் சரியாக அடையாளம் காட்ட முடியும். (மேற்கொண்டு சான்று பொருட்களை அடையாளம் காட்ட வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது.)